


33ஆவது ஆண்டில்
# விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059 www.vlambaram.com
email: vlambaram@sympatico.ca www.tamilvanakkam.com




நதி: 33 பாலம்: 20 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் OCTOBER 15, 2023

# இஸ்ரேல் – ஹமாஸ் மோதல்!

2023 ஒக்ரோபர் 07ஆம் திகதி அதிகாலை ஸ்ரேலுக்கு அருகில் இருக்கும் காசா பிரதேசத்தை நிர்வகித்து வரும் ஹமாஸ் இயக்கத்தினர் இஸ்ரேல் மீது திடீரெனத் தாக்குதலைத் தொடங்கினர். அவர்கள் இத்தாக்குதலுக்கு ஒப்பரேசன் அல் அக்ஷா புயல் (Operation Al - Aqsa Storm) எனப் பெயரிட்டிருந்தனர். இஸ்லாம் மதத்தலைவர்களால் உலகில் உள்ள மசூதிகளில் 3ஆவது முக்கியத்துவம் வாய்ந்தது எனப் போற்றப்படும் கிழக்கு ஜெருசலேமில் உள்ள அல் அக்ஷா (Al-Aqsa) மசூதியை இஸ்ரேலியர் அவமதித்ததைப் பழிவாங்கும் நோக்குடன்தான் இத்தாக்குதலுக்கு இப் பெயர் இடப்பட்டது. மெக்கா மற்றும் மதீனாவில் உள்ள மசூதிகளுக்குப் பின்னர் கிழக்கு ஜெருசலேமில் இருக்கும் இந்த மசூதியே இஸ்லாம் மதத்தவர்களுக்குப் புனிதமானது. யூதர்களும் இந்த இடத்தில்தான் 3000 ஆண்டுகளுக்கு முன்னர் யூதர்களுடைய வழிபாட்டுத்தலம் கட்டப்பட்டிருந்ததாக உரிமை கோருகின்றனர்.

ஒக்ரோபர் மாதத் தொடக்கப் பகுதியில் அல் அக்ஷா மசூதிக்கு ஜோர்டான் வெளியுறவுத்துறை அமைச்சர் சென்றபோது இஸ்ரேலியப் படைகள் அங்கு நுழைந்து அங்குள்ள இஸ்லாமியத் தலைவர்களுடைய கல்லறைகளை சேதப்படுத்தினர் என ஹமாஸ் இயக்கம் கூறுகிறது. ஏப்பிரல் மாதத்திலும் இஸ்ரேல் நகர்காவலர் இந்த மசூதிக்குள் சென்று அங்கு பிரார்த்தனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்கள் மீது இரப்பர் குண்டுகளைப் பாவித்து தாக்கியிருந்தது எனவும் குற்றம் சாட்டப்பட்டிருந்தது. அப்போது ஜோர்டான், எகிப்து மற்றும் துருக்கி ஆகிய நாடுகள் இஸ்ரேலின் இந்தச் செய்கையை கண்டித்து அறிக்கை விட்டிருந்தன.

ஒக்ரோபர் 07ஆம் திகதி ஹமாஸ் இயக்கத்தினர் இஸ்ரேலில் ஊடுருவியும், காசாவில் இருந்து ஏவுகணைகளை மழைபோல் பொழிந்தும் தாக்குதல் நடத்தினர். இத்தாக்குதலை எதிர்பார்த்திராத இஸ்ரேலிய அரசு திக்குமுக்காடிப் போனது. இஸ்ரேல் நாடு உருவாகிய கடந்த 75 ஆண்டுகளில் இல்லாத அளவு தீவிரமான தாக்குதலாக இது இருந்தது. ஹமாஸ் இயக்கத்தினர் 5,000 வரையிலான ஏவுகணைகளை இஸ்ரேல் மீது ஏவியுள்ளனர். அத்துடன் அவர்கள் கார், மோட்டார் சைக்கிள் மற்றும் பரசூட்டில் இஸ்ரேலுக்குள் நுழைந்து தாக்குதல் நடத்தினர். இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு உடனடியாக அமைச்சரவையைக் கூட்டிப் “போர் பிரகடனம்” வெளியிட்டு காசா நகர் மீதும் ஹமாஸ் இயக்கத்தினர் மீதும் பதில் தாக்குதலை ஆரம்பித்து அதை மிகத் தீவிரமாக நடத்தி வருகிறார்.



காசா பகுதியில் இருந்துவந்த ஏவுகணைகள் இஸ்ரேலின் இராணுவ மையங்கள், ஆயுதக் கிடங்குகள் மற்றும் விமான நிலையங்களை நோக்கி ஏவப்பட்டிருந்தன. அத்துடன் இஸ்ரேலினுள் புகுந்த ஹமாஸ் படையினர் இஸ்ரேலிய இராணுவ வீரர்கள், நகர்காவலர்கள் மற்றும் பொது மக்களைக் கைது செய்து காசா பகுதியில் பிணைக் கைதிகளாவும் வைத்துள்ளனர்.

ஐந்து நாட்களாகத் தொடர்ந்த ஹமாஸ் படையினரின் தாக்குதலில் 155 இஸ்ரேலியப் படையினரும், 1,000 பொது மக்களும் கொல்லப்பட்டுள்ளனர். 2,700 பேர் வரையில் காயப்பட்டுள்ளனர். தாக்குதல் ஆரம்பித்த நாளான ஒக்ரோபர் 7ஆம் திகதி இஸ்ரேலில் விடுமுறைநாள். அன்று அவர்கள் Sukkot என்ற பெருநாள் கொண்டாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். காசாவின் எல்லைக்கு அருகில் உள்ள திறந்த வெளியில் நடைபெற்ற ஓர் இசை நிகழ்ச்சியில் 3,000இற்கு மேற்பட்டோர் பங்குபற்றியிருந்தனர். அந்நிகழ்வினுள் உள்சென்ற ஹமாஸ் படையினர் கண்மூடித்தனமாக சுட்டதில் அந்த விழாவில் பங்குபற்றியவர்களில் 260 பேர் உயிரிழந்துள்ளனர். ஐந்து நாள் போர் முடிவில் இஸ்ரேலுக்குள் உள்ளிட்ட ஹமாஸ் தீவிரவாதிகள் அனைவரையும் கொன்றுவிட்டதாகவும் அவர்களது 1,500 சடலங்கள் இஸ்ரேலினுள் இருப்பதாகவும், அத்துடன் ஹமாஸ் தீவிரவாதிகள் இராணுவ வீரர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட 150 பேர்வரை பிணைக் கைதிகளாகப் பிடித்துக்கொண்டு காசாவிற்குள் சென்று விட்டனர் எனவும் இஸ்ரேலிய அரசு விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதேவேளை காசா நகர் மீது இஸ்ரேல் தொடர்ந்து நடத்திவரும் ஏவுகணை மற்றும் வான் தாக்குதலால் அந்நகரில் பெரும்பான்மையான கட்டடங்கள் தரைமட்டமாகி உள்ளன. ஐந்து நாட்களில் 2,000 பேர் வரை காசா நகரில் பலியாகியுள்ளனர் என எதிர்பார்க்கப்படுகிறது. 5,100பேர் வரையில் காயப்பட்டுள்ளனர். ஐந்தாவது நாள் முடிவில் இஸ்ரேலிய அரசு விடுத்த அறிக்கையில் காசா எல்லைப்பகுதியை ஹமாஸ் பயங்கரவாதிகளிடம் இருந்து மீட்டுள்ளோம் எனத் தெரிவித்துள்ளது. காசா நகர் மீதான இஸ்ரேலின் தாக்குதலிற்கு முன்னர் இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு காசாவில் உள்ள பொதுமக்களைப் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு அறிவித்திருந்தார். காசா நகரில் 2.3 மில்லியன் மக்கள் வாழ்கின்றனர். இதில் இரண்டரை இலட்சம் (0.25 மில்லியன்) மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி ஐக்கிய நாடுகள் சபை நடத்தும் 83 பாடசாலைகளில் தங்கியுள்ளனர். இப்பாடசாலைகளில் கடும் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது. இங்கு மக்கள் நிரம்பி வழிவதால் அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் கிடைக்காமல் அவர்கள் அவதியுறுகின்றனர்.

காசா நகரின் மீது சர்வதேச அளவில் தடை செய்யப்பட்ட பொஸ்பரஸ் குண்டுகளை இஸ்ரேல் வீசி வருவதாக ஹமாஸ் இயக்கம் குற்றம்சாட்டி வருகிறது. பாலஸ்தீனர்கள் பொஸ்பரஸ் குண்டுகள் வீசப்படும் ஒளிப் படங்களையும், வீடியோக்களையும் சமூக

தொடர்ச்சி 05 பக்கம்














2023
EXCLUSIVE INCENTIVES
Registration:
647-296-0596
THE GREATEST SALE
EXCLUSIVE INCENTIVES ONE DAY ONLY!
FEATURING
THE 9HUNDRED
SIGNATURE RESIDENCES
THOMPSON TOWERS
THE POST
THE FIFTH
HORSESHOE RESIDENCES
MUSKOKA BAY RESORT
fourme
Tricycle
Up to 75K in CASH back!
1.9% Mortgage for 2 Years!
Extended Deposit Structures!
Positive Cash Flows!
5% Down Programs!
Free Assignments!
Right to Lease during occupancy!
& More!
PARA TISIKULASINGAM
Sales Representative
(647) 296-0596
www.ParaCity.ca
HOMELIFE
HIGHER STANDARDS
HOME LIFE / GTA REALTY INC.,Brokerage*
*Independently Owned and Operated
5215 Finch Ave E, Unit 203, Toronto, ON MIS 0C2
O:416.321.6969 | F: 416.321.6963



Available Till Midnight
Including Weekends & Holidays

ANTON
DHARMASEELAN
MORTGAE AGENT

#1 Mortgage Agent in GTA
#2 in Canada

CALL ME FIRST
FOR ALL YOUR MORTGAGE NEEDS

PURCHASE
REFINANCE
SELF EMPLOYED
BAD CREDIT
INVESTMENT PROPERTY
RENEWAL

MAJOR BANKS
ALTERNATIVE LENDERS
B LENDERS
CREDIT UNIONS
TRUST COMPANIES
PRIVATE LENDERS

416 704 1200

anton@myhomemls.ca

MORTGAGE ALLIANCE

Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4

FAX: 1 866 566 3068

# விக்னேஸ்வரனின் கருத்துக்கள் ஏற்படுத்தியுள்ள சர்ச்சை




முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜா பதவி விலகிச் சென்ற விவகாரம் தொடர்பில் பல்வேறு போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. தமிழ் பிரதேசங்களில் மட்டுமன்றி, தெற்கிலும் அவருக்கு நீதி கோரி போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில், முன்னாள் வடமாகாண முதலமைச்சரும் தற்போதைய நாடாளு மன்ற உறுப்பினருமான சி.வி. விக்னேஸ் வரன் தெரிவித்துள்ள கருத்து சர்ச்சைக்குள்ளாகி வருகின்றது.

உயிர் அச்சுறுத்தல் மற்றும் தொடர்ச்சி யான அழுத்தங்கள் காரணமாக தான் பதவி விலகுவதாக அறிவித்துள்ள முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி. சரவணராஜா தனது பதவி விலகல் கடிதத்தை நீதிச்சேவை ஆணைக் குழுவிற்கு அனுப்பியிருந்தமையும், அவர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளமையும் சகலரும் அறிந்த விடயமே.

அவருக்கு ஏற்பட்ட இந்த நிலைமை குறித்து நீதி வேண்டி பல போராட்டங்கள் நடைபெற்றுள்ளன. தமிழ் தேசியக் கட்சிகள் ஒன்றிணைந்து மனிதச் சங்கிலி போராட்டத்தை நடத்தியுள்ளதோடு தொடர்ச்சியாக வெவ்வேறு வடிவங்களில் போராட்டத்தை முன்னெடுப்பது தொடர்பில் கலந்தாலோசனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

முல்லைத்தீவு நீதிபதி ரி.சரவணராஜா மீதான உயிர் அச்சுறுத்தல் காரணமாக நாட்டை விட்டு வெளியேறியமை தொடர்பில் முழுமையான நீதி விசாரணை நடத்த வலியுறுத்துவதாக மட்டுமன்றி, நீதித்துறையில் இருந்தாலும் தமிழர் என்பதால் இன ஒடுக்குமுறைக்கு உள்ளாகுவதை சுட்டிக்காட்டியும், கண்டித்தும் தமிழ் தேசியக் கட்சிகள் இணைந்து வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஹர்த்தால் போராட்டத்தை நடத்தவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள் ளது.

எதிர்வரும் 20ஆம் திகதி வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஹர்த்தால் போராட்டத்தை கடைப்பிடிப்பது என தமிழ் தேசியக் கட்சிகள் தீர்மானம் எடுத்துள்ளன.

நீதிபதிகளினதும் நீதித்துறையினதும் கௌரவம் மற்றும், சுயாதீனத் தன்மையை பாதுகாக்குமாறு வலியுறுத்தி நாடளாவிய ரீதியிலுள்ள சட்டத்தரணிகள் கடந்த 09ஆம் திகதி கொழும்பில் உயர்நீதி மன்றத்திற்கு முன்பாக கவனயீர்ப்புப் போராட்டமொன்றை முன்னெடுத்துள்ளமை யும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

இவை, இவ்வாறு தொடர்கின்ற வேளையில், விக்னேஸ்வரன் காணொளி ஒன்றில் சரச்சைக்குரிய கருத்துக்களை தெரிவித்திருக்கின்றார். நீதிபதி சரவணராஜாவிற்கு ஆங்கில மொழிப் பிரச்சினை இருந்திருக்கும் அதனால், சட்டமா அதிபர் தெரிவித்த விடயத்தை தவறாக புரிந்துகொண்டிருக்கலாம் என அவர் தெரிவித்திருந்தார். நீதிபதிகளுக்கு ஆங்கிலம் மட்டுமன்றி சிங்களம் தமிழ் உள்ளிட்ட மூன்று மொழிகளும் நன்றாக தெரிந்திருக்க வேண்டும் என்றும் அவர் அந்தக் காணொளியில் குறிப்பிட்டிருந்தார்.

இது தமிழ் மக்கள் மத்தியில் நாடாளு மன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன் தொடர்பில் கடும் விசனத்தை ஏற்படுத்தி யுள்ளது. சமூக வலைத்தளங்களில் விக்னேஸ்வரன் கடுமையான விமர்சனத்திற்கு உள்ளாகி வருகின்றார்.

இதனையடுத்து, தான் கூறிய கருத்துக் களுக்கு விளக்கமளிக்கும் செய்திக் குறிப்பொன்றை அவர் வெளியிட்டுள்ளார்.

'நீதிபதி சரவணராஜாவிற்கு மொழிப் பிரச்சனை இருந்திருக்கும்' என்ற தலைப்பில் தான் கூறியதாக ஊடகங்களில் வெளியான செய்தி தமிழ் மக்களிடையே தன் மீது ஒரு தவறான கருத்தை ஏற்படுத்தியிருப்பதை தான் அவதானிப்பதாகவும், சட்டமா அதிபர் நீதிபதி சரவணராஜாவை அழைத்து அவரின் தீர்ப்பை மாற்றும்படி கோரியதாக வந்த செய்தியைப் பற்றி தன்னிடம் கேட்கப்பட்ட போது அது அவ்வாறு நடந்திருக்க மாட்டாது என்ற கருத்தை தான் வெளியிட்டிருந்தமை உண்மையே என்றும் விக்னேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார்.

“தீர்ப்பு எழுதுவதற்கு முன்னர் நீதிபதியை சட்டமா அதிபர் தம் காரியாலயத்திற்கு அழைத்தார் என்று எங்கும் கூறவில்லை. அப்படி நடந்திருந்தால் அது ஒரு பார தூரமான குற்றம். அதனைக் கட்டாயமாக நீதிபதி அவர்கள் நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் கவனத்திற்கு கொண்டு வந்திருப்பார். அப்படியான செய்திகள் ஏதுமில்லை.

தீர்ப்பு எழுதியதின் பின்னரே அவரை அவ்வாறு சட்டமா அதிபர் அழைத்ததாக



செய்திகள் கூறுகின்றன. அப்படியாயின் எழுதிய தீர்ப்பை நீதிபதி ஒருவர் எவ்வாறு மாற்ற முடியும் என்ற கேள்வி எழுகின்றது. தீர்ப்பை அளித்ததன் பின்னர் மாற்றுமாறு கோர சட்டமா அதிபர் அத்தகைய சட்டசூனியம் மிக்கவர் என்று நாம் கருத முடியாது. எனவே நடந்தது வேறொன்றாக இருந்திருக்க வேண்டும்.

மன்றிலே கொடுத்து மேன்முறையீட்டிற்கு இலக்காகிய அவரின் தீர்ப்பை மாற்றுமாறு எந்த விதத்தில் சட்டமா அதிபர் கோரியிருக்க முடியும்? ஒரு சாதாரண குடிமகன் கூட அவ்வாறு கோரியிருக்க மாட்டான். ஆகவே நடந்தது என்னவாக இருந்திருக்கக்கூடும் என்று யோசித்தேன்.

ஒருவேளை சட்டமா அதிபர் “You could have avoided writing a judgment of this nature”என்று சாதாரணமாக கூறியதை “You should have avoided writing a judgment of this nature” என்று நீதிபதி சரவணராஜா பொருள் கொண்டிருக்கலாம் என்று நினைத்தேன். அதனால்தான் மொழிப்பிரச்சினை காரணமாக இருந்திருக்குமோ என்று சிந்தித்தேன்” என்று விக்னேஸ்வரன் தனது செய்திக்குறிப்பில் விளக்கியிருக் கின்றார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு தான் வக்காலத்து வாங்குவதாகவும் அவரது கைப்பொம்மை போல்தான் நடப்பதாகவும் ஊடங்களில் சித்தரிக்கப்பட்டுள்ளது என்றும் விக்னேஸ்வரன் ஊடகங்களை குற்றம்சாட்டுகின்றார்.

'யோசித்தேன்- நினைத்தேன்- சிந்தித்தேன்- கூறினேன்' என்று தனது ஊகங்களை எல்லாம் பொறுப்பற்ற முறையில் பொது வெளியில் வெளியிடுவதானது ஒரு நீதி யரசராக இருந்தவருக்கு பொருத்தமான பண்பு அல்ல என பொதுமக்கள் கூறுகின்றனர்.




# அலுவலக...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

மாற்றக்கூடிய சந்தர்ப்பங்கள் ஏற்பட்டுள்ளது அல்லது அலுவலக கட்டிடத் தொகுதிகளை வெவ்வேறு தேவைகளிற்காக மாற்றவேண்டிய நிலைமையும் ஆராயப்படுகின்றது.

உதாரணமாக, பாடசாலைகளாக மாற்றும் உத்தேசம். அல்பேட்டா மாகாணத்தில், அலுவலகங்களை மாற்றுவதற்கு கல்கரி நகரம் பொருளாதார உதவி செய்வதனைக் காணக்கூடியதாக உள்ளது.

இதனைத் தொடர்ந்து கனடாவின் மற்ற நகரங்களிலும் இவ்வாறான பொருளாதார உதவிகள் ஏற்பட்டால், மேலும் பல அலுவலகக் கட்டிடத் தொகுதிகள் மக்கள்




வாழ்வதற்காக மாற்றக்கூடிய அதிக சந்தர்ப்பங்கள் ஏற்படும்.

விளம்பரம்
VLAMBARAM
33ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலக பொறுப்பாளர்: யசோதா குமாரகுலசிங்கம்
பதிப்பு: Canyon Press Inc.
'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.
Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059/ FAX: 416-286-0344
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416.754.7338 / 416.724.7480
3011 Markham Road, Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# இஸ்ரேல்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

வலைத்தளங்களில் வெளியிட்டு வருகின்றனர்.

இஸ்ரேலியப் பிரதமர் விடுத்த போர் பிரகடனத்திற்கு அமெரிக்கா, கனடா உட்பட மேற்கத்திய நாடுகள் பலவும் ஆதரவு தெரிவித்ததுடன் இஸ்ரேல் தனது நாட்டின் பாதுகாப்பிற்காக எவ்வாறாயினும் போர் புரியலாம் எனவும் தெரிவித்துள்ளனர். இஸ்ரேலில் இறந்தவர்களில் அமெரிக்கர் 14 பேரும் கனடியர் மூவரும் அடங்குவர். அத்துடன் ஹமாஸிடம் இருக்கும் பிணைக் கைதிகளில் அமெரிக்கர்களும் இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.



A rocket attack from the Gaza Strip into southern Israel
Thanks: Ahmad Gharabli/AFP/Getty Images

அமெரிக்க அதிபர் வெளியிட்ட அறிக்கையில் "பிணைக் கைதிகளாக இருக்கும் அமெரிக்கர்களை மீட்பதைத் தவிர வேறு எந்த முன்னுரிமையும் எங்களுக்கு இப்போது இல்லை. அமெரிக்காவின் தாக்குதல் படையணி மத்திய தரைக்கடல் பகுதிக்கு விரைந்துள்ளது. எங்களது போர் விமானங்கள் அங்கு முகாமிட்டுள்ளன. தேவைப்பட்டால் களமிறங்க அமெரிக்கப் படைகள் தயாராக உள்ளன. இஸ்ரேல் மீது ஹமாஸ் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்திய நிமிடம் முதல் நானும், எமது குழுவினரும் இஸ்ரேலுடன் தொடர்ந்து தொடர்பில் இருக்கிறோம். அமெரிக்க நாடாளுமன்றம் கூடும்போது இஸ்ரேலுக்கான கூடுதல் நிதி உதவிக்கு ஒப்புதல் பெறப்படும். இது ஒரு கட்சிப் பிரச்சினை இல்லை, இது ஓர் அரசியல் பிரச்சினை இல்லை. இது ஒட்டு மொத்த உலகத்தின் பாதுகாப்புத் தொடர்பான பிரச்சினை. அமெரிக்காவின் பாதுகாப்புத் தொடர்பானது. எந்த ஒரு நாடும், எந்த ஒரு இயக்கமும் தற்போதைய சூழ்நிலையை தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள முயற்சிக்கவே கூடாது. அதைச் செய்யவும் கூடாது. அமெரிக்காவில் வெறுப்பு என்ற பேச்சிற்கே இடமில்லை. யூதர்களுக்கோ, இஸ்லாமியர்களுக்கோ எதிராக யாரும் செயல்படக் கூடாது. இந்த வெறுப்பு நடவடிக்கைகளை அமெரிக்கா நிராகரிக்கிறது. அதேபோல் பயங்கரவாத நடவடிக்கை களையும் நாங்கள் நிராகரிக்கிறோம்.

பயங்கரவாதத்தை நியாயப்படுத்த முடியாது, மன்னிக்கவும் முடியாது. பாலஸ்தீன மக்களின் சுயநிர்ணய உரிமைக்காகவோ, பாலஸ்தீனர்களின் உரிமைக்காகவோ போராடாதவர்கள் ஹமாஸ் பயங்கரவாதிகள். அவர்கள் இஸ்ரேல் என்ற நாட்டையும், யூத மக்களையும் அழித் தொழிப்பதை இலக்காகக் கொண்டவர்கள். பாலஸ்தீன மக்களை மனிதக் கேடயங்களாக ஹமாஸ் பயங்கர வாதிகள் பயன்படுத்தினார்கள். தற்போதும் பயன்படுத்து கின்றனர். இத்தாக்குதலில் அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டிருப்பது பெரும் கவலையைத் தருகிறது. இஸ்ரேல் இதற்குத் தக்க பதிலடி தருவதற்கு முழு உரிமையும் உண்டு" என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனடியப்பிரதமர் விடுத்துள்ள அறிக்கையில் "ஸ்ரேலில் நடைபெற்ற ஹமாஸ் தாக்குதலை கனடா வன்மையாகக் கண்டிக்கிறது. ஸ்ரேல் தனது பாதுகாப்பிற்காக சர்வதேச சட்ட விதிகளுக்கு அமைய எவ்வாறாயினும் பதில் தாக்குதலை நடத்தலாம். கனடா எப்போதும் ஸ்ரேலின் நடவடிக்கைகளுக்கு ஆதரவாகவும் உதவியாகவும் இருக்கும். ஹமாஸ் இயக்கம் சுயநிர்ணய உரிமைக்காகப் போராடும் இயக்கம் அல்ல. அவர்கள் தீவிரவாதிகள். கனடாவில் எவரும் ஹமாஸ் பயங்கரவாதிகளுக்கு ஆதரவு தெரிவிக்கக் கூடாது" என்று தெரிவித்துள்ளார்.

ரஷ்ய அதிபர் புடின் வெளியிட்டுள்ள அறிக்கையில், "அமெரிக்காவின் மத்திய கிழக்குப் பகுதிக்கான கொள்கைகளின் தோல்வியே தற்போதைய பிரச்சினைக்கு மூலகாரணம். பாலஸ்தீன மக்களின் பிரச்சினைகளை அமெரிக்கா கண்டுகொள்ளவில்லை. அவர்களின் கஷ்டங்களை கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை. இவ்வாறு பாலஸ்தீனர்களை தவிர்த்துப் பிரச்சினையைத் தீர்க்க அமெரிக்கா செய்த முயற்சியே தற்போதைய பிரச்சினைக்கு மூலகாரணம். தாங்கள் வைத்ததுதான் சட்டம். தாங்கள் மட்டுமே அமைதியைக் கொண்டு வருவோம் என்று அவர்கள் நினைத்தனர். அவர்கள் நினைத்தது நடைபெறவில்லை. துரதிர்ஷ்டவசமாக இரு தரப்பினரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய அமைதிக்குப் பதிலாக தற்போது போர்தான் உருவாகியுள்ளது. இரண்டு



Israeli airstrike in Gaza City
Thanks: Mohammed Abed/AFP/Getty Images

தரப்பும் அமைதியை இழந்துள்ளது. ஐக்கிய நாடுகள் சபை இந்த விவகாரத்தில் இஸ்ரேல் என்ற நாட்டுடன் தனிப்பட்ட பாலஸ்தீனம் என்ற நாட்டையும் உருவாக்க வேண்டும் என்று 1947ஆம் ஆண்டில் உத்தரவிட்டது. அதை இஸ்ரேல் மதிக்கவில்லை, அமெரிக்காவும் ஏற்க வில்லை. தனி பாலஸ்தீனம் மட்டுமே இந்த மோதலுக்கு ஒரேதீர்வாக இருக்க முடியும். அமெரிக்கா அதைப்பற்றி நினைப்பதும் இல்லை. பாலஸ்தீன மக்களின் தனிப்பட்ட கவலைகள், பிரச்சினைகள் பற்றி அமெரிக்கா கவலைப் படுவதும் இல்லை" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீன அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில், "பாலஸ்தீனம் - இஸ்ரேல் மோதலில் சீனா எப்போதும் நடுநிலை வகித்து வருகிறது. சீனா எப்போதும் நீதியின் பக்கமே இருக்கும். இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனம் ஆகிய இரு நாடுகளுக்கும் ஒரு நண்பன் என்ற முறையில் இரு நாடுகளும் அமைதியுடன் வாழ்வதைக் காண நாங்கள் விரும்புகி றோம். இரண்டு நாடுகளும் மோதலை நிறுத்த வேண்டும். அமைதியை நிலைநாட்ட வேண்டும். உடனடியாக 'இரு நாடுகள்' தீர்வை நடைமுறைப்படுத்த வேண்டும். இஸ்ரேல் தனி நாடாக இருப்பது போல் பாலஸ்தீனத்தை சுதந்திர நாடாக நிறுவ வேண்டும்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"1947ஆம் ஆண்டில் புதிய ஐக்கிய நாடுகள் சபை பாலஸ்தீனியப் பிரதேசத்தில் ஒரு அரபு அரசையும் ஒரு யூத அரசையும் உருவாக்கி ஒரு திட்டத்தை வகுத்திருந்தது. 1948இல் யூத நாடாக இஸ்ரேல் பிரகடனப்படுத்தப்பட்டது. ஆனால், அரபு நாடான பாலஸ்தீனம் இன்றும் பிரகனடப்படுத்தப்படாமலேயே உள்ளது" என ஐக்கிய இராச்சியத்தில் உள்ள Newcastle பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சர்வதேச சட்ட நிபுணரான Amy Maguire ஊடகங்களது கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போது தெரிவித்தார்.

இரண்டாம் உலக யுத்த முடிவின்போது பிரிட்டன் யூத மக்களுக்கு ஒரு நாடு உருவாக்கிக் கொடுப்பதாக உறுதியளித்திருந்தது. அதன் முயற்சிகள் பலனளிக்காமல் போகவே பிரிட்டன் அந்த வேலையை ஐக்கிய நாடுகள் சபையிடம் கையளித்தது.

ஐ.நா. பொதுச்சபைத் தீர்மானம் 181 (ii)இன் மூலம் ஐக்கிய நாடுகள் சபை ஓர் அரபு அரசையும் ஒரு யூத அரசையும் உருவாக்குவதாகவும் ஜெருசேலம் நகரைச் சுற்றியுள்ள பிரதேசத்தை 'சர்வதேச நகரமாகப்' பிரகடனப்படுத்துவதாகவும் வெளியிட்டது.




UN Palestine Partition Versions 1947 Thanks: Wikipedia

இத்தீர்மானம் 1947 நொவெம்பர் 29ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபையில் எடுக்கப்பட்டது. அரபு நாடுகள் இத்தீர்மானத்திற்கு எதிராக வாக்களித்து இஸ்ரேல் என ஒரு யூதநாடு உருவாகுவதை எதிர்த்தனர். அப்போது ஆரம்பமான உள்நாட்டுப்போரில் ஏழு இலட்சத்திற்கு மேற்பட்ட பாலஸ்தீனர்கள் யூத அரசு உருவாக இருந்த

(தொடர்ச்சி 09ஆம் பக்கம்...)



## நாமும் நமது இல்லமும் 640

# அலுவலக வாடகை: கோவிட்-19இன் பாதிப்பு



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

கோவிட்-19 தொற்றுநோய் மக்களின் வாழ்வில் பல மாற்றங்களை ஏற்படுத்திய தனை சகலரும் அறிந்ததே. குறிப்பாக மக்கள் தொழில்புரியும் முறையிலும் பெரிய மாற்றத்தைக் காணக்கூடியதாக உள்ளது. ஏற்கனவே 5 அல்லது 6 நாட்கள் தொழில்புரிவதற்காக அலுவலகம் செல்ல வேண்டியிருந்தது. கோவிட்-19, மக்களை வீட்டிலிருந்து மேற்கொள்ளும் தொழில்முறையை உருவாக்கியது. இதனால் வீட்டிலிருந்தே மக்கள் தொழில் புரிந்தனர். கோவிட்-19 மெல்ல, மெல்ல குறைய சில அலுவலகங்கள் தமது ஊழியர்களை 2 அல்லது 3 நாட்கள் அலுவலகத்திற்கு வந்தால் போதும் என்ற முறையை உருவாக்கியது.

சில அலுவலகங்கள் தமது ஊழியர்களை தமது வீட்டிலோ அல்லது வெவ்வேறு நாடுகளில் இருந்தோ தொழில் புரியலாம் என்ற நிலையை உருவாக்கியது. இந்த முறை, அலுவலகங்களை வாடகைக்குக் கொடுத்த நிறுவனங்களின் வருமானங் களில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தத் தொடங்கியது. குறிப்பாக நகரின் மத்தியிலிருக்கும் அதிக வாடகை பெற்ற பல கட்டிடத் தொகுதிகள் முற்றாக வருமானத்தை இழக்கக் கூடிய நிலைமையை உருவாக்கியது.

சில அலுவலகங்கள் தாம், ஏற்கனவே பெற்றிருந்த அலுவலங்களின் அளவை குறைக்கத் தொடங்கின. வேறு சில நிறுவனங்கள் புதிதாக நிர்மாணம் செய்திருந்த கட்டிடத் தொகுதிக்கு தமது வியாபாரத்தை மாற்றின.

பல நிறுவனங்கள் முதல் தர தன்மை கொண்ட (Class A) அலுவலகக் கட்டிடத் தொகுதி (இந்த வகை கட்டிடங்கள் பொதுவாக சிறப்பான நிர்வாகத்துடன், புதிதாக நிர்மாணம் செய்ததாகவும், புதிய தொழில்நுட்பங்கள், பாதுகாவலர்களிற்கு Security or Concierge கொண்டதாக இருக்கும்) தமது அலுவலக மற்றும் வியாபாரத்தை மாற்றுவதனை காணக் கூடியதாக உள்ளது. இதனால் பழைய கட்டிடத் தொகுதிகள் தமது அலுவல கத்தை வாடகைக்குக் கொடுப்பதில் நெருக்கடி ஏற்படுவதுடன் குறைந்தளவு வாடகையே பெறவேண்டியுள்ளது.



கோவிட் தொற்றுநோய்க்கு முந்தைய பகுதியில் மூன்றுவகை கட்டிடத்தொகுதி களிற்கும் (Class A, Class B, Class C) வாடகையில் பெரிதளவான மாற்றங்கள் காணப்படவில்லை. அந்தக்காலத்தில், குறிப்பாக நகரின் மத்தியில் வாடகைக்கு அதிக நிறுவனங்கள் போட்டியிட்டன. கோவிட் தொற்றுநோய்க்குப் பிற்பாடு வீட்டிலிருந்து தொழில்புரிவதும், பல நிறுவனங்கள் நகரைவிட்டு வெளியேறிய தும் அலுவலகத்தின் அளவைக் குறைத் தாலும் பழைய கட்டிடத் தொகுதிகள் (Class C) மிகவும் நெருக்கடியில் உள்ளன.

2019ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில், கனடாவின் நகரப்பகுதியில் Class A கட்டிடத் தொகுதியில் வாடகைக்காகக் காத்திருக்கும் அலுவலக வெற்றிடம் (Vacancy Rate) 10%ஆகவும், Class B மற்றும் Class C கட்டிடத்தில் 12% ஆகவும் காணப்பட்டது. ஆனால், இதே காலத்தில் ரொறொன்ரோவில் இந்தப் பெறுமதிகள் முறையே 4% ஆகவும் 5% ஆகவும் காணப்பட்டது.

கோவிட்-19க்குப் பிற்பாடு, குறிப்பாக இந்த ஆண்டின் (2023), 3ஆம் காலப்பகுதியில் இந்தப் பெறுமதியில் பெரிய வித்தியாசம் காணப்படுகின்றது. ரொறொன்ரோ பகுதி யில் Class A கட்டிடத் தொகுதியில் Vacancy 16%ஆகவும் Class B & Class C Vacancy rate 22%ஆகவும் அதிகரித்துள்ளது.

ஒட்டாவாவில் இவை முறையே 24% ஆகவும் 33%ஆகவும் உள்ளது. இதனால் பல பழைய கட்டிடத் தொகுதியில் மக்கள் வாழக்கூடிய அடுக்குமாடி கட்டிடங்களாக (Apartment) மாற்றக்கூடிய சந்தர்ப்பங் கள் ஏற்படலாம். ஆனால், தரம் குறைந்த மிகப் பழைய கட்டிடங்களை, அடுக்கு மாடிக் கட்டிடங்களாக மாற்ற அதிக முதலீடுகள் தேவைப்படலாம்.

அண்மையில் ஏற்பட்ட கணிப்பீட்டில் கனடா முழுக்க ஏறக்குறைய 169 கட்டிடத் தொகுதிகள் அடுக்குமாடி மனைகளாக

(தொடர்ச்சி 04ஆம் பக்கம்...)




Condo for Sale

- Tridel Unit
  1 Bedroom + Den Condo for Sale
- Kennedy & Highway 401
  Den Can be used as Bedroom 24 hours Security
- Easy Access to Mall, Universities, Colleges, Highway etc...
- Available anytime.



For more info. Please Call....
GEORGE PARANTHAMAN
416.277.9044

HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife/GTA Realty Inc. Brokerage*
5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S 0C2
Tel: 416-321-6969 * Independently owned and operated.

# மோடி சொல்வது சரியா? தமிழ்நாட்டில் கோவில் சொத்துகள் கொள்ளையா?

## ஸ்ரீவித்யா நேர்காணல் நேர்கண்டவர்: கண்ணன்

தமிழ்நாடு இந்து கோவில்களை அரசு ஆக்கிரமித்துள்ளதாகவும், அதுபோல இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள் வழிபாட்டுத் தலங்களின் நிர்வாகத்தை அரசு கையில் எடுக்க முடியுமா என்றும், இந்திய பிரதமர் மோடி கேள்வி எழுப்பியுள்ளார். இதை தமிழ்நாட்டில் அல்ல தெலுங்கானா மாநிலத்தில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார கூட்டத்தில் மோடி பேசியுள்ளார். மோடி பேசியது சரியா? ஏன் தமிழ்நாட்டு பிரச்சினையை தெலுங்கானாவில் மோடி பேசுகிறார்?

இது தொடர்பாக, திராவிடர் நட்பு கழகத்தைச் சேர்ந்த ஸ்ரீவித்யாவை சென்னையில் சந்தித்தோம்.

**தமிழ்நாட்டில் கோயில்கள் அரசுக் கட்டுப்பாட்டில் இருக்கக் கூடாது என்பவர்கள், இந்து சமய அறநிலையத் துறை வேண்டாம் என்பவர்கள், அரசின் வேலை சட்டம் ஒழுங்கை பராமரிப்பது, மின்சாரம் வழங்குவது, சாலை போடுவது போன்ற அடிப்படை கட்டமைப்பை உருவாக்கிப் பேணுவதுதான் மத விவகாரங்களில் அரசு தலையிடக் கூடாது என்கிறார்கள். உங்கள் பதில் என்ன?**

தமிழ்நாட்டில் இருக்கும் பெரிய கோவில்கள் மன்னர்களால் உருவாக்கப்பட்டன. குறிப்பாக சேர, சோழ, பாண்டிய மன்னர்களாலும் பிற்காலத்தில் நாயக்க மன்னர்களாலும் உருவாக்கப்பட்டுள்ளது. மன்னர்கள் எப்படி இந்த கோயில்களை உருவாக்கினார்கள்? அதற்கான பணம் அவர்களுக்கு எங்கேயிருந்து வந்தது? வரியாக வசூலிக்கப்பட்ட மக்களின் பணம் அரசு கருவூலத்தில் சேர்ந்து, அதைக் கொண்டுதான் கோவில்கள் கட்டப்பட்டுள்ளன. இக்கோவில்களுக்கு இருக்கும் சொத்துகள், நிலம், நகை எல்லாம்கூட மக்கள் கொடுத்ததுதான். பெரும்பான்மை நிலங்கள் மக்களிடம் இருந்து வலுக்கட்டாயமாகப் பிடுங்கி கோவிலுக்குக் கொடுக்கப்பட்டது. கோவில் உருவானது மக்கள் காசில்தான், கோவிலின் சொத்துகளும் மக்களுடையதுதான். ஆக கோவிலின் முழு உரிமை மக்களைத்தான் சேரும்.

மன்னர்கள் காலத்தில் கோவில்கள் அவர்கள் கட்டுப்பாட்டில் இருந்தன. மன்னர்கள் காலம் முடிந்து இப்போது நடப்பது மக்களாட்சி. எனவே, மக்களால் தேர்வு செய்யப்பட்ட அரசு கட்டுபாட்டில் கோவில்கள் உள்ளன.

மக்களின் சொத்து என்றால் மக்களிடமே



கொடுத்துவிட வேண்டியதுதானே, இந்து மதத்தினருக்கு சொந்தமான கோவில்கள் அந்த மத மக்களிடம் இருப்பதுதானே சரியானது என்பதுதான் பாஜகவினர் வாதமாக இருக்கிறது?

எப்படி? யாரிடம் கொடுப்பது? பொதுப் போக்குவரத்து மக்களுடையதுதான். அதற்காக மக்களிடமே கொடுத்து நீங்களே நிர்வாகம் செய்துகொள்ளுங்கள், பராமரித்துக்கொள்ளுங்கள் என்று கொடுத்துவிட முடியுமா? இல்லைதானே, அதுபோல்தான் மக்களின் சொத்துக்களான கோவில்கள் இப்போது மக்களால் தேர்வு செய்யப்பட்ட அரசாங்கத்தால் நிர்வாக செய்யப்படுகிறது, பராமரிக்கப்படுகிறது.

இன்னொன்று, இந்து சமய அறநிலையத் துறை இருக்கக்கூடாது என்பவர்கள், இத்துறை ஏன் உருவானது? உருவாக்கியது யார்? என்று இதற்கு பின்னால் இருக்கும் வரலாற்றையும் பார்க்க வேண்டும். இந்த துறை உருவாக்கப்பட்டு 200 வருடங்கள் ஆகிறது. முதலில் 1810ஆம் ஆண்டு பிரிட்டிஷார் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்டது. 1863இல் அது இன்னும் மேம்படுத்தப்பட்டது.

மத விவகாரங்களில் தலையிடக் கூடாது என்கிறீர்கள் சரி, அதில் பிரச்சினை வந்தால் அரசு தலையிட்டுதானே ஆக வேண்டும். உங்களுக்கும் உங்கள் பக்கத்து வீட்டுக்காரருக்கும் பிரச்சினை. அவர் காவல்துறையில் போய் புகார் தெரிவிக்கிறார் என்றால் காவல்துறை வரத்தானே செய்யும். எங்கள் குடும்ப விவகாரத்தில் நீங்கள் தலையிடக்கூடாது என்று சொல்ல முடியுமா? அப்படித்தான், கோவில்களில் நிறைய பிரச்சினை உள்ளதாக உண்மையான பக்தர்கள் புகார் தெரிவித்ததன் அடிப்படையில்தான் அரசு தலையிட்டது. கோவில்களில் நிறைய ஊழல்கள் நடக்கிறது, கொள்ளை நடக்கிறது, கொலை நடக்கிறது என்று பக்தர்கள் போய் பிரிட்டீஷ் அரசாங்கத்திடம் புகார் கொடுக்கிறார்கள். அதனால்தான் அவர்கள் இந்து சமய அறநிலையத் துறையை உருவாக்கினார்கள். பின்னர் படிப்படியாக அது செழுமைபடுத்தப்பட்டது.

தமிழ்நாட்டின் அன்றைய வடிவமான சென்னை மாகாணத்தில் 1920இல் நீதிக்கட்சி ஆட்சிக்கு வந்தது. அப்போது மீண்டும் பக்தர்கள் கோவில்களில் ஊழல் நடப்பதாகப் புகார்களுடன் வந்து நின்றனர். அதனால், நீதிக்கட்சி அரசாங்கம் ஒரு குழு அமைத்தது. அக்குழுவில் இரண்டு பேர் பிராமணர்கள். அக்குழு அறிக்கை அடிப்படையில் இந்து சமய அறநிலையத்துறை சட்டத்தை அரசு உருவாக்கியது.

சென்னை மாகாணத்தில் நடந்தது போலவே இந்தியா முழுவதும், ஆங்காங்கே கோயில் நிர்வாகத்தை கையில் வைத்திருந்தவர்கள் செய்த ஊழல் தொடர்பாக பக்தர்களிடம் இருந்து புகார்கள் வந்தன. இதனையடுத்து ஒன்றிய அரசு 1920இல் சிபி ராமசாமி ஐயங்கார் தலைமையில் ஒரு குழு அமைத்தது. அக்குழு இந்தியா முழுவதும் பயணம் செய்து கோவில்களை பார்த்தது. அந்த குழு தாங்கள் பார்த்ததை அறிக்கையாக கொடுத்தபோது சிபி ராமசாமி ஐயங்கார் சொன்னது என்ன வென்றால், 'இந்து சமய அறநிலையத்துறை இல்லையென்றால் கோவில்களில் அறமே இருக்காது' என்பதுதான்.

மேலும், 'கோவில்கள் மிக மோசமான நிலைமையில் இருக்கிறது, கோவில்களில் அநாகரிகமான செயல்கள் நடக்கிறது, கொலை _ கொள்ளை நடக்கிறது, குருக்களுக்கு மந்திரமே தெரியவில்லை, சமஸ்கிருதம் தெரியவில்லை, ஆகமம் தெரியவில்லை, சாமி நகை குருக்கள் 'ஆத்துல' இருக்கிறது. எனவே, எந்தந்த மாநிலங்களில் எல்லாம் இந்து சமய அறநிலையத்துறை இல்லையோ அங்கெல்லாம் தயவு செய்து அந்தத் துறையை ஆரம்பித்துவிடுங்கள்' என்றெல்லாம் அறிக்கையில் சிபி ராமசாமி ஐயங்கார் குறிப்பிட்டிருந்தார். அதில் மிக முக்கியமான மாநிலம், உத்தரபிரதேசம். அதன் பின்னர்தான், அவரது அறிக்கை யின் அடிப்படையில் இந்தியா முழுவதும் எல்லா மாநிலங்களிலும் இந்து சமய அறநிலையத் துறை உருவாக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் மட்டுமல்ல இந்தியாவில் அனைத்து மாநிலங்களிலும் இந்து சமய அறநிலையத்துறை உள்ளது. தமிழ் நாட்டில் இந்த துறையை கலைக்க வேண்டும் என்று சொல்லும் மோடியும் பாஜகவினரும் அண்ணாமலையும், அவர்கள் ஆளும் மாநிலங்களில் முதலமைச்சர்களிடம் சொல்லி ஏன் அந்த துறையை கலைக்கவில்லை? அங்கெல்லாம் செல்லாமல் தமிழ்நாட்டில் இதை வலியுறுத்துவதற்கு அண்ணாமலைக்கும் மோடிக்கும் பின்னால் ஓர் அரசியல் இருக்கிறது.

மோடிக்கும் அண்ணாமலைக்கும் பின்னால் இருந்து, இந்த சட்டம் வேண்டாம், இந்து சமய அறநிலையத்துறையே இருக்கக் கூடாது என்பவர்களின் நோக்கம் கோவில்களின் பல லட்சக்கணக்கான சொத்துகள் தான். ஆம், இந்து சமய அறநிலையத் துறை இருக்கக்கூடாது என்று சொல்வோர், ஆலய மீட்புக் குழுவினர் 'ஆட்டையை' போடணும்னு நினைக்கிறது கோவில்களின் பல லட்சம் கோடி சொத்துகள், நிலங்கள் மற்றும் அந்த கோயில்களில் இருக்கும் தங்கம், வைரம். இவை எல்லாம் அரசு கட்டுப்பாட்டில் இருப்பதால் அது சாத்தியமில்லாமல் இருக்கிறது. எனவே, கோயில்கள் அரசு கட்டுப்பாட்டில் இருக்கக்கூடாது என்கின்றனர்.

**சரி, இந்த கோரிக்கையை முன்வைக்கும் மோடிக்கும் அண்ணாமலைக்கும் பின்னால் இருக்கும் அந்த அரசியல் என்ன?**

பாஜகவால் தமிழ்நாட்டில் மதவெறியை தூண்டவே முடியாது. தமிழ்நாடு ஆன்மிக மண்தான். இங்கே இருக்கும் 99 சதவிகித மக்களுக்கு இறை நம்பிக்கை இருக்கிறது. ஆனால், அந்த இறை நம்பிக்கையை அவர்கள் அரசியலாக மாற்றவில்லை. ஆன்மிகத்தையும் கடவுள் நம்பிக்கையையும் அரசியலோடு கலக்கக்கூடாது என்கிற சிந்தனை தமிழ்நாட்டு மக்களுக்கு உள்ளது. அதனால்தான், தமிழ்நாட்டை பெரியார் மண் என்றும் சொல்கிறோம். இதனால், இந்து சமய அறநிலையைத் துறையை கலைத்துவிட்டு, கோவிலுக்குள் சென்று, கோவில்களில் அரசியல் பரப்புரை செய்து, மத அரசியலை புகுத்தி, மதவெறியை உருவாக்கிவிட வேண்டும் என்று பாஜககாரர்கள் திட்டமிடுகிறார்கள்.

ஏற்கெனவே, ஒரு கோவிலில் மோடிஜி பேசி பரப்புரை செய்துள்ளார்கள். இப்படி கோவிலுக்குள் செய்வது ஆகம விதி மீறல்.

**கோவில்களில் ஊழல் இருந்ததால் இந்து அறநிலையத்துறை உருவாக்கப்பட்டது என்று நீங்கள் சொல்கிறீர்கள். ஆனால், இப்போது இந்து அறநிலையத்துறையில் ஊழல் உள்ளது. கோவில்கள் சரியாக பராமரிக்கப்படவில்லை. அதனால்தான் அத்துறையை கலைக்கச் சொல்கிறோம் என்று அவர்கள் சொல்கிறார்கள்?**

வாய் வார்த்தையாகத்தானே சொல்கின்ற

(தொடர்ச்சி 11ஆம் பக்கம்...)

For your Special Occasions
SHORT TERM RENTAL
TORONTO
Large House available for your Special Occasions Short Term Rental in Scarborough. Daily rental possible.
If Interested email :
georgeparan1@gmail.com


# நானிலம் போற்றும் நட்பு - 31




"பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை
பெருகலிற் குன்றல் இனிது." (அதிகாரம் தீ நட்பு, குறள் 811) என்ற குறளிற்கு "அன்பு மிகுதியால் பருகுவார் போல் தோன்றினாலும் நற்பண்பு இல்லாதவரின் நட்பு, வளர்ந்து பெருகுவதை விடத் தேய்ந்து குறைவது நல்லது" என்று உரையாசிரியர் மு.வரதராசனார் அவர்கள் உரை தந்துள்ளார்.

"அன்பால் அப்படியே விழுங்கிவிடக் கூடியவர் போல் காணப்பட்டாலும், தீயவரிடம் கொண்ட நட்பு வளர்வதைவிடக் குறைவதே நன்மை தரும்" என்று உரையாசிரியர் அருள்திரு திருக்குறள் மாமுனிவர் முனைவர் கு.மோகனராசு அவர்கள் உரை தந்துள்ளார்.

"நற்குணமற்றவர் நட்பு வளர்வதைவிடக் குறைவதே நலமாகும்" என்று உரையாசிரியர் சாமி சிதம்பரனார் அவர்கள் உரை தந்துள்ளார்.

"நல்ல பண்பு இல்லாதவர்கள் அன்பு வெள்ளத்தில் நம்மை மூழ்கடிப்பதுபோல் தோன்றினாலும் அவர்களது நட்பை, மேலும் வளர்த்துக் கொள்ளாமல் குறைத்துக் கொள்வதே நல்லது" என்று உரையாசிரியர் கலைஞர் அவர்கள் உரை தந்துள்ளார்." தீய நட்பு வளரக்கூடாது. அது இல்லாமல் இருப்பது நல்லது என்ற அறிவுரையை இந்தக் குறள் எடுத்துக் கூறுகின்றது.

நட்பின் பெருமை பற்றி குறுந்தொகையில் வரும் பாடல் சிலவற்றையும் கடந்த இதழ்களில் உரையாடினோம்.

இப்பொழுது குறுந்தொகையில் வரும் பதினோராவது பாடலைக் கவனிப்போம்.
பாட்டு
"கோடூர் இலங்குவளை நெகிழ, நாள்தொறும்
பாடு இலகலிழும் கண்ணொடு, புலம்பி
ஈங்குஇவண் உறைதலும் உய்குவம் ஆங்கே
எழு இனி வாழி என் நெஞ்சே? முனது
குல்லைக் கண்ணி வடுகர் முனையது,
பல்வேல் கட்டி நன்னாட்டு உம்பர்.
மொழி பெயர் தேஎத்தர் ஆயினும்,
வழிபடல் சூழ்ந்திசின் அவருடை நாட்டே."
இந்தப் பாடலின் பொருளினைக் கவனிப்போம்.

"என் நெஞ்சமே வாழ்க உனக்கோர் உண்மையைக் கூறுகின்றேன். கேள்! பிரிந்து சென்ற தலைவன் இன்னும் வரவில்லை. நானும் எத்தனையோ நாட்களாகக் காதலன் வரவை நோக்கிக் காத்துக் கிடக்கின்றேன். என் துக்கத்தை என்னால் அடக்கிக் கொண்டிருக்க முடியவில்லை. அவர் பிரிவை எண்ணி என் நெஞ்சம் ஏக்கமுறுவதால் என் உடம்பும் இளைத்து விட்டது. என் கையில் அணிந்திருக்கும் வளையல்கள் கழன்று கழன்று விழுகின்றன. இந்த அளவுக்கு என் உடம்பு மெலிந்துவிட்டது.




இது மட்டுமா? அவர் பிரிந்த நாள் முதல் இன்று வரையிலும் நான் உறங்கவேயில்லை, உள்ளத்திலே துயரம் ஓங்கி நிற்கும்போது உறக்கம் எப்படி வரும் ஒரு நாளாவது என் கண்கள் இமையோடு இமை பொருந்துவதில்லை. கலக்கமடைந்து கண்ணீர் சிந்தி அழுகின்றன. இப்படித் தனித்திருந்து வருந்தும் நிலையிலிருந்து நாம் தப்பித்துக் கொள்ளவேண்டும். அவர் சென்றிருக்கும் இடத்திற்கு நாமும் போனால்தான் இத்துன்பத்திலிருந்து தப்பிக்க முடியும். ஆதலால் இப்பொழுதே எழுந்திரு அவர் இருக்கும் இடத்திற்குப் போவோம் புறப்படு.

தம் கண்முன்னே காணப்படும் கஞ்சங்குல்லை மலரால் தொடுத்த மாலையை அணிந்த வடுகர் நாட்டின் பக்கத்தே கட்டி என்பவனுடைய நல்ல நாடு இருக்கின்றது. சிறந்த வீரனாகிய அந்தக் கட்டியின் நாட்டுக்கு அப்பாலுள்ள வேறு மொழி வழங்கும் நாட்டிலே என் தலைவர் போய்த் தங்கியிருக்கின்றார். அவர் தங்கியிருப்பது அந்நிய நாடாயினும் அந்த நாட்டிற்குச் செல்ல நினைத்தேன். ஆகையால் என் உள்ளமே உடனே புறப்படு" என்று பாடல் கூறுகிறது.

தலைமகன் பிரிந்து போய்விட்டான். பொருள் தேட வேற்று நாட்டிற்குப் போயிருக்கின்றான். தலைவி மட்டும் தனித்து நிற்கின்றாள். தலைவன் வரவை எதிர்பார்த்து, எதிர்பார்த்து ஏங்கி நின்றாள். தலைவன் வந்தபாடில்லை.

தலைவனைப் பிரிந்திருக்கும் உள்ளத் துயரத்தால் அவள் உடல் மெலிந்துவிட்டது. உள்ளத்திலும் வேதனை உடலிலும் இளைப்பு. இந்நிலையடைந்தோர்க்குத் தூக்கம் பிடிக்காதல்லவா? அவள் தூங்கவும் இல்லை. நெஞ்சத்தின் துக்கம் வளர்ந்தது. அத்துக்கம் நெஞ்சில் அடங்கி நிற்கவில்லை. அவள் போட்ட அணைகளை உடைத்துக்கொண்டு அழுகையாக வெளிவந்தது. அவள் தன் துன்பத்தை வாய்விட்டுச் சொல்லவும் தொடங்கி விட்டாள். "இங்கே தனித்திருப்பது இப்படி வருந்துவதைவிட அவர் இருக்கும் இடத்திற்குச் சென்றுவிடுவது நலம்" என்று சொல்லிக் கொண்டாள். தனக்குத் தானே இவ்வாறு சொல்லிக் கொண்டாள். இவள் பக்கத்திலிருந்த தோழியின் காதில் விழும்படி இந்த மொழிகளைச் சொன்னாள். கணவனைப் பிரிந்திருக்கும் துக்கம் தாங்காமல் சொல்லிய மொழிகள் இவை. இப்படி ஒரு தலைவி தன் நெஞ்சத்தை நோக்கித் தன் பெருந்துக்கத்தை வெளியிட்ட செய்தியைக் கூறுகிறது இப்பாடல். இது மாமூலனார் என்னும் புலவர் பாடிய பாட்டு. பாலைத் திணை சார்ந்தது.



இப்பொழுது குறுந்தொகையில் வரும் பதினிரண்டாவது பாடலைக் கவனிப்போம்.
"எறும்பி அளையின் குறும்பல் சுனைய"
உலைக்கல் அன்ன பாறை ஏறிக்
கொடுவில் எயினர் பகழி மாய்க்கும்
கலைத்து என்பஅவர் சென்ற ஆறே
அதுமற்று அவலம் கொள்ளாது
நொதுமல் கழறும்இவ் வழுங்கல் ஊரே."
இந்தப் பாட்டின் பொருளினைக் கவனிப்போம்.

"தலைவர் புறப்பட்டுப் போயிருக்கும் வழி கொடுமை யானது" எண்ணற்ற இடையூறுகள் நிரம்பியிருப்பது துணையில்லாமல் அவ்வழியிலே யாரும் செல்லமாட்டார்கள். அவர்போன வழியிலே பல சுனைகள் உண்டு. அவை எறும்பு வளைகளைப் போலக் குறுகிய தோற்றத்தையுடையன. அதனால் அவ்வழி வழுக்கல் உடையது. நீர் நிறைந்த மேடு பள்ளங்களை உடையது மலையில் உள்ள பாறைகள் கொல்லன் உலைக் களத்தில் உள்ள பட்டடைக் கல்லைப் போல் சூடேறிக் கிடக்கின்றன.

அங்கே உள்ள எயினக் குடியினர் அந்தப் பாறைகளிலே ஏறித் தமது அம்புகளைக் கூர்மையாகத் தீட்டிக் கொண்டிருப்பார்கள். வழிப்போக்கர்களின் மேல் அவ்வம்புகளை விட்டாலும் விடுவர்.

அவர் சென்ற வழி நேர் வழியுமன்று. பல கிளை வழிகளைக் கொண்டது. குறித்த இடத்திற்கு எந்த வழியிலே போவது என்று கண்டுபிடிக்க முடியாமல் திகைக்க வைக்கும். அவர் போன வழி இப்படிப்பட்ட துன்பமுள்ள வழியென்பதை அதைக் கண்டவர்கள் கூறக் கேட்டிருக்கின்றேன். அதைப் பற்றித்தான் நான் நினைத்து வருந்திக் கொண்டிருக்கிறேன். என்னுடைய இந்தத் துயரத்தை இவ்வூர் அறியவில்லை. நீயும் உணரவில்லை. காதலன் பிரிவால் வருந்துகின்றேன் என்று என்னைப் பற்றி இவ்வூர் ஏதேதோ சொல்லுகின்றது. என் உண்மையான துன்பத்தை உணராமல் வேறு மொழிகளைச் சொல்லி என்னைப் பழிக்கின்றது. இது அறியாமை." என்கிறது இந்தப் பாடல்.
ஓதலாந்தையார் என்னும் புலவர் பாடிய பாட்டு இது. தலைவியின் துயர் கண்டு வருந்திய தோழிக்குத் தலைவி கூறியதாக உள்ளது. பாலைத் திணை சார்ந்தது இந்தப் பாடல்.

(தொடர்ச்சி 10ஆம் பக்கம்...)

# இஸ்ரேல்...

05ஆம் பக்கத்தொடர்ச்சி

இடத்தை விட்டு வெளியேற்றப்பட்டனர். 1948 மே 15ஆம் திகதி யூதர்களுக்கு ஒரு நாடாக இஸ்ரேல் உருவானது. 1949 மார்ச் மாதத்தில் ஏற்பட்ட கலவரங்களின் போது இஸ்ரேல் ஜெருசலேம் நகரின் மேற்குக் கரை உட்பட பல பிரதேசங்களைக் கைப்பற்றியது. 1967ஆம் ஆண்டில் நடைபெற்ற போரில் முழு ஜெருசலேம் நகரையும் பல அரபு இடங்களையும் இஸ்ரேல் கைப்பற்றிது.

பாலஸ்தீன அதிகார சபைத் தலைவரான Mohamoud Abbas 2011ஆம் ஆண்டு வெளியிட்ட அறிக்கையில், 1948ஆம் ஆண்டில் அரபு நாடுகள் ஓர் அரபு அரசாக பாலஸ்தீனம் உருவாகுவதை நிராகரித்ததன் மூலம் ஒரு வரலாற்றுத் தவறை செய்துள்ளனர் என்று கூறியுள்ளார்.



Current Map of Israel











# தேடலின் கூறுகள்

வங்கக்கடல் அலைகள் இசை பாடிக்கொண்டு தமது உடலைக் கழுவ
மெருகேறும் வடிவழகாய் புதுப்பொலிவுடன்
மாமல்லபுரம் உயிர்ச் சிலைகள்
பல்லவரின் வரலாறு பேசுகின்றன

திருச்செந்தூர்க் கடலில் தலை மூழ்கி
நிலத்தடியின் கருநிறக் கற்பாறைகளைத் தடவிப்பார்த்து
ஈழத்தின் தொண்டைமானாறு
செல்வச்சந்நிதி முருகன் கடலோரத்து
முருகைக் கல்லுடன்
ஒத்திருப்பதை அறிந்து கொள்ளலாம்

ஆழி தனது பல்வரிசையைக் காட்டிச்
சிரிப்பதுபோல் வேகப்படகுகள்
கடலைக் கிழித்து விரைந்து செல்லும் போது அலைகள் எழுந்து
மடிந்து சுருண்டு
வெண் நுரையைப் பரப்புகின்றன.

நெய்தல் நிலத்துத் தென்றல் உப்புக்காற்றில்
தென்னைமர இளஞ்சோலைகள்
வெண்மணல் வளத்தில் செழித்து வளர்ந்து இனிய கற்பனை ஊற்றை
இளநீரில் கலந்து ஊட்டிய உதிரத்துக்கு



எனது எழுதுகோல் தினமும் நன்றி கூறுகின்றது

இயற்கை எழிலும் கல்வி அழகும்
அனுபவப் புதையலும்
தமிழின் தொன்மை வேர் வரலாறுகளையும்
தெருக்கூத்து விறலியர் ஆட்டங்களையும் பறை இசையில் நடித்துக் காண்பிக்கின்றன;

முடி சூடிய அமுத முத்தமிழுக்குப்
பிடி மண்ணும் கொடி ஒன்றும் தேடுதல்
செம்மொழி அறிவுவொளி வழங்கி
வழிவிடும்;



முத்துராஜா

## நானிலம்...

08ஆம் பக்கத்தொடர்ச்சி

தலைவனைப் பிரிந்ததால் வருந்தி யிருக்கும் தலைவியின் நிலையைக் கண்டாள் தோழி. “தலைவி உண்மை அறியாதவள் அல்லள். பிரிதலும் கூடுதலும் இயற்கையென்பது அவள் அறிந்தது தான். ஆயினும் அவள் உள்ளத்திலே உறுதியில்லை. துக்கத்தைப் பொறுத்திருக்கும் துணிவில்லை. நெஞ்சிலே வலிமையில்லாமல் நிலை கலங்குகின்றாள்” என்று கவலை யடைந்தாள் தோழி. தோழியின் இக்கவலையை அறிந்த தலைவி அவள் கேட்கும்படி கீழ்வருமாறு கூறினாள் “நான் தனித்திருப்பதற்காக வருந்தவில்லை. தலைவன் சென்றிருக்கும் வழி மிகவும் கொடுமையானது. இடையூறுகள் நிறைந்தது. அதை நினைத்தே நான் வருந்தியிருக்கின்றேன். தலைவனுக்கு வழியிலே எந்த ஆபத்தும் வரக்கூடாதே என்று நினைத்துத் தான் நெஞ்சங் கலங்குகின்றேன். இந்த உண்மையை அறியாமல் அவர் பிரிவால் வருந்து கின்றேன் என்று இவ்வூர் வேறொன்றைச் சொல்லுகின்றது என்று கூறினாள் தலைவி. இச்செய்தியைச் சொல்வதே இப்பாடல்.

தலைவன், தலைவி ஆகியோரின் காதல் வாழ்க்கையில் தோழியின் பங்கு எவ்வளவு உயர்ந்ததாக உள்ளது என்பதை குறுந்தொகையில் உள்ள சில பாடல்கள் எடுத்துக் காட்டுகின்றன. நட்பின் பெருமை இவற்றால் நன்கு புலப்படுகிறது.

சங்க இலக்கியங்கள் மூலமாகவும் நட்பு பற்றிய கருத்துகளை இத்தொடர் கட்டுரையில் தொடர்ந்து ஆராய்வோம்.

நாமும் வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர் களும் நன்றாகவே வாழட்டும். “நானிலம் போற்றும் நட்பு” என்ற தலைப்பில் தொடர்ந்து உரையாடுவோம்.

(தொடரும்)



# மோடி...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

னர். அதையே அறிக்கையாகக் கொடுப்பார்களா? இங்கே, இவ்வளவு பணம் காணாமல் போயுள்ளது என்று அறிக்கையாக கொடுக்கச் சொல்லுங்கள். இந்து சமய அறநிலையத் துறையில் ஊழல் நடந்துள்ளது என நீதிமன்றத்தில் வழக்கு போடச் சொல்லுங்கள். அதைச் செய்யாமல் வாய் வார்த்தையாகவே அவர்கள் பேசிக்கொண்டு இருப்பதற்கு காரணம், மக்கள் மத்தியில் மதவெறியை தூண்டுவதுதான் நோக்கம்.

இந்து சமய அறநிலையத்துறை ஏன் தேவை என்பதற்கு நான் ஒரு சமீப உதாரணம் சொல்கிறேன். சிதம்பரம் நடராஜர் கோவில் இந்து சமய அற நிலையத்துறை கட்டுப்பாட்டில் இல்லை. தீட்சிதர்கள் கட்டுப்பாட்டில் உள்ளது. தீட்சிதர்கள்தான் அக்கோயிலில் குருக் களாகவும் இருக்கிறார்கள், கோயில் நிர்வாக கமிட்டியிலும் இருக்கிறார்கள். கமிட்டியில் இருப்பவர்கள் தவறு செய்தது கண்டுபிடிக்கப்பட்டால் 1000 ரூபாய் அபராதம் கட்டச்சொல்லிவிட்டு, மீண்டும் கமிட்டியில் சேர்த்துக்கொள்வார்கள்.

இப்போது அரசாங்கம் சிதம்பரம் நடராஜர் கோயில் கணக்கைக் கேட்கிறது. கணக்கு கொடுக்க முடியாது என்று தீட்சிதர்கள் சொல்கிறார்கள். உங்களிடம் அரசாங்கம், நீங்கள் எவ்வளவு சம்பாதிக்கிறீர்கள் என்று கணக்கு கேட்டால் கொடுக்க முடியாமல் இருக்க முடியுமா? ஒரு பிரஜை, உண்மையான தேசபக்தர் அரசாங்கம் கேட்டால் கணக்கு கொடுப்பார்கள்தானே. ஆனால், தீட்சிதர்களால் கொடுக்க முடியாது என்று சொல்ல முடிகிறது. ஏன் அவர்கள் கொடுக்க மறுக்கிறார்கள் என்பதற்கு பின்னால் ஒரு கதை இருக்கிறது.

